தாராபுரத்தில் தலைவர் உரை கேட்க தாரைதாரையாகத் திரண்ட மக்கள்!



‘இன்வெஸ்டிங் பார்ட்னர்’ – ‘வொர்க்கிங் பார்ட்னர்’ – ‘ஸ்லீப்பிங் பார்ட்னர்’ – ‘சீக்ரெட் பார்ட்னர்’

எல்லாம் ஒன்றுசேர்ந்து தமிழ்நாட்டை ‘அம்பேல்’ ஆக்க நினைக்கும்

‘கார்ப்பரேட் மாஃபியா’ த.வெ.க. கும்பலை விரட்டியடிக்கத் தயாராவீர்!

தாராபுரம் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

தாராபுரம், அக். 4 –

தாராபுரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவை ஆதரித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றியபோது, “ ‘இன்வெஸ்டிங் பார்ட்னர்’, ‘வொர்க்கிங் பார்ட்னர்’, ‘ஸ்லீப்பிங் பார்ட்னர்’, ‘சீக்ரெட் பார்ட்னர்’ எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழ்நாட்டை ‘அம்பேல்’ ஆக்க நினைக்கும் ‘கார்ப்பரேட் மாஃபியா’ த.வெ.க. கும்பலை விரட்டியடிக்கத் தயாராவீர்” என்று வேண்டுகோள் விடுத்தார்.

தாராபுரத்தில் 02.10.2026 அன்று நடைபெற்ற பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட் பாளர் வழக்கறிஞர் எஸ். சுகன்யாவிற்கு ஆதரவாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிகழ்த்திய உரை வருமாறு:

அமராவதி ஆற்றின் அழகும் வரலாற் றுச் சிறப்பும் கொண்டிருக்கும் தாராபுரம் மக் களுக்கு என் அன்பான வணக்கம்! தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர் என்றால், அந்தத் தஞ்சைக்கே விதை நெல்லை விநியோகம் செய்யும் விதைக்க ளஞ்சியம், நம் தாராபுரம்! தென்னை, மஞ் சள் உற்பத்தி யிலும் சிறந்து விளங்கும் சுறுசுறுப்பான ஊர், இந்த தாராபுரம்! உழைப்பையும் உண்மையையும் மதிக் கும் தாராபுரம் மக்களான உங்களிடம் வாக்கு கேட்டு மட்டும் நான் வரவில்லை; நியாயம் கேட்டு வந்திருக்கிறேன்!

மக்கள் துரோகிக்கு தக்க பாடம் புகட்டுவீர்!

ஒருவரிடம் பெட்டி பெட்டியாகப் பணத் தைத் திணித்ததால், மக்களான உங்கள் மீது இந்த இடைத்தேர்தல் திணிக்கப்பட்டிருக்கிறது. பெட்டியைக் கொடுத்தது யார்? பெட்டியை வாங்கியது யார்? உங்களுக்கு நன்றாக, உளப்பூர்வமா கத் தெரியும். இன்னொன்றும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் கட் டிய வரிப் பணத்தில்தான் இந்த இடைத்தேர் தல் நடக்கப்போகிறது. ஐந்து மாதங்களுக்கு முன்னால் நீங்கள் போட்ட வாக்கினைச் செல்லாத வாக்காக்கிவிட்டார்கள்! அந்த மக் கள் விரோதிக்கு, அந்தத் துரோகிக்கு நீங்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும். துரோ கத் தை த முறியடிப்பது மட்டுமில்லை – விலைபோ காத ஒருவரை, உங்களுக்கு



விசுவாசமானவரை வெற்றி பெற வைக்க வும் உங்களை நாடி நான் வந்திருக்கிறேன்.

இதோ உங்களிடத்தில் இருகரம் கூப்பி, ஆதரவைக் கேட்டு, வாக்கு கேட்டு நிற்கிறார், நம்முடைய அருமைத் தங்கை வழக்கறி ஞர் சுகன்யா. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் திரா விட முன்னேற்றக் கழக வேட்பாளர், நம்மு டைய சுகன்யா அவர்களுக்கு உதயசூரி யன் சின்னத்தில் வாக்களித்து, நீங்கள் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தங்கை சுகன்யா துடிப்பான இளம் வேட் பாளர்! அடிப்படையிலேயே வழக்கறிஞர்! அதனால், சட்டமன்றத்திலும் உங்களுக்காக நன்றாக வாதாடுவார்! எல்லாவற்றிற்கும் மேலாக, உங்களிடம் வாங்கும் வாக்குகளை வேறு கட்சியிடம் விலைபேசி விற்கமாட்டார்!

‘ஜனநாயகன்’ என்று தன்னுடைய திரைப்படத்திற்கு பெயர் வைத்த முதல்வர், ஜனநாயகத்தின் வில்லனாக இருக்கிறார்!

ஜனநாயகத்தைச் சாகடித்ததால் வரும் இடைத்தேர்தல்!

பொதுத்தேர்தல் நடந்து ஐந்து மாதங்கள் ஆகவில்லை... அதற்குள் இந்த இடைத் தேர்தல். இது எதனால் வந்தது? இதற்குக் காரணமானவர்கள் யார்? என்று தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்... சத்தியத் திற்கு விரோதமாகச் செயல்பட்ட அந்த வேட் பாளரை மக்களான நீங்களே இப்போது என்ன சொல்லி அழைக்கிறீர்கள்? “பெட்டி பாமா”, “பல்டி பாமா” என்றுதான் சொல்கிறீர் கள். சட்டமன்ற உறுப்பினர் இறந்தால்தான், அந்தத் தொகுதியில் இடைத்தேர்தல் வரும். அவ்வாறு வந்த தேர்தல் இது அல்ல! நீங்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளர் ஜனநாய கத்தைச் சாகடித்ததால் வரும் இடைத் த்தேர் தல் இது! ஆட்டம் காணும் ஆளுங்கட்சிக் குத் துணைபோக விலைபோனதால் இந்தத் தேர்தல் வந்திருக்கிறது! வாக்களித்த உங்கள் மீது துளிகூட மதிப்பே இல்லாமல், உங்கள் விரலில் இருக்கும் மை அழிவ தற்கு முன்னாடியே வேறு கட்சிக்கு ஓடிப் போன அவர்களுடைய செயலில் என்ன கொள்கை இருக்கிறது? யாருடைய நலன் இருக்கிறது? உங்கள் வாக்குகளை விற்ற ஒரு வேட்பாளர், அதை விலைபேசி வாங் கிய ஒரு கட்சி – இதற்கு யாராவது மீண்டும் வாக்களிப்பீர்களா?

பெரும்பான்மைக்குத் தேவையான 118 இடங்களைக்கூட வெல்ல முடியாத, மக்க ளின் ஆதரவு இல்லாத முதலமைச்சர், தன்னு டைய சுயலாபத்திற்காக மக்களின் தீர்ப்பை விலைக்கு வாங்க வரவழைத்திருக்கும் தேர் தல்தான், இந்தத் இடைத்தேர்தல்! புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் அவர், ஆட்சி செய் வது எப்படி என்று கற்றுக்கொள்ள முயற்சி செய்வார் என்று பார்த்தால், அதைவிட்டுவிட்டு அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறார்! இது தான் நீர்வாகமா? இதுதான் மாற்றமா? “ஜன நாயகன்” என்று தன்னுடைய திரைப்படத்திற்குப் பெயர் வைத்த முதலமைச்சர், ஜனநாயகத்தின் வில்லனாகக் குதிரைபேரம் செய்து இந்த இடைத்தேர்தலை வரவழைத்திருக்கிறார்!

மக்களின் பெரும்பான்மை ஆதரவு இல்லாத இந்த ரீல் முதலமைச்சர், முதலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் இருந்த காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட் சிகளுக்கு அமைச்சர் பதவியைக் கொடுத்து ஆதரவை வாங்கினார்.

‘சோபா’ அனுப்பி, அ.தி.மு.க.வின் ஆதரவை வாங்கியவர் விஜய்!

ஆளுநர் ஆட்சி வரக்கூடாது என்ற எண் ணத்தில் கம்யூனிஸ்டுகளும் ஆதரவு தந்தார் கள். இவர்களை யாரையும் நம்பாமல், அப்போதே சோபா அனுப்பி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதி சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவை வாங்கினார். அது போதாதென்று அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உடைத்து, பல சட்டமன்ற உறுப் பினர்களை விலைக்கு வாங்கி, ராஜினாமா வும் செய்ய வைத்து, தன்னுடைய கட்சியில் இணைத்துக்கொண்டு இந்த இடைத்தேர் தலை வரவழைத்திருக்கிறார்.

தொடர்ச்சி 6-ஆம் பக்கம்

Chief Minister – ஆக நடந்து கொள்ளுங்கள்!
Cheap Minister – ஆக நடந்து கொள்ளாதீர்!

மக்கள் பிரச்சினைகளை விவாதிக்க வேண்டிய சட்டமன்றத்தின் மாண்பையும் இந்த முதலமைச்சர் கெடுத்துவிட்டார். கண்ட கண்ட சைகைகளைக் காட்டி, நான் மிசா சிறைவாசத்தில் சந்தித்த கொடுமைகளைக் கிண்டல் செய்யும் இடமாகச் சட்டமன்றத்தை மாற்றியிருக்கிறார். மக்கள் “மாண்புமிகு முதலமைச்சர்” என்று கூப்பிடும் தராதரத்தோடு அவர் நடந்துகொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொல்கிறேன், Chief Minister ஆக நடந்து கொள்ளுங்கள்; Cheap Minister ஆக நடந்துகொள்ளாதீர்கள்.